1995 நவம்பர் 10]

விடை—

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள புராதன வரலாற்று சிறப்பு மிக்க திருத்தலங்களைக் கண்டு களிப்பதற்கு சுற்றுலா போக்குவரத்து கழகத்தின் சார்பில் பேருந்துகள் விடப்பட்டிருப்பதாலும், தமிழ்நாடு அரசு "தீரன் சின்னமலை போக்குவரத்து கழகம்" மூலம் குறைந்த கட்டணத்தில் ஏற்கனவே அதிகப்படியான பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதாலும், இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் சொகுசுப் பேருந்து விடுவதற்கு அவசியம் இல்லையென்று அரசு கருதுகிறது.

94—

மண்டைக்காடு பகவதியம்மன் கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் அமைத்தல்

*வினா எண் 78630—***திரு. ஆ. பாலையா:** *மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் கோயில் வளாகத்தில் திருமண மண்டபம், அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

(இ) விதி 51-இன் கீழ் உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாதவையாக மாற்றப் பெற்று, அவற்றுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்டுள்ள விடைகள் உட்பட அவைமுன் வைக்கப்பெற்றவை பட்டியல்கள் 16 முதல் 18 வரை இணைப்பு 1 ஆக சேர்க்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[*1995 நவம்பர் 10*

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கோபிசெட்டிப்பாளையம், கடத்தூர் காவல் எல்லையில் கண்ணங்காட்டுப்பாளையத்தைச் சேர்ந்த துரைசாமி சந்தேகத்திற்கிடமான முறையில் மரணமுற்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. சி. ஞானசேகரன், (குறுக்கீடு), திரு. இளம்வழுதி, வேறு ஒரு பிரச்சினையை எடுத்துக்கொள்ள இருக்கிறேன். (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, நீங்கள் என்னிடத்தில் எதுவும் கொடுக்காமல் விளக்கம் கேட்க முடியாது (குறுக்கீடு) இல்லை, நீங்கள் ஏதாவது என்னிடத்தில் கொடுத்தீர்களா? (குறுக்கீடு) நீங்கள் இதுபற்றி நான் பேச இருக்கிறேன் என்று முன்னதாகக் கொடுத்திருக்க வேண்டும் (குறுக்கீடு) நீங்கள் என்னிடத்தில் எதுவும் கொடுக்காமல் இங்கே கிளப்புவதற்கு இல்லை. என்னிடம் கொடுத்துவிட்டுப் பேசலாம். உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், நீங்கள் ஒரு பிரச்சினையைக் கொடுத்து இருக்கிறீர்கள். அதை நீங்கள் lock up death என்று சொல்லியிருக்கிறீர்கள். lock up-லே நடந்த மரணமாக அது இல்லை. வெளியிலே இறந்திருக்கின்ற, ஒரு சந்தேகமான இடத்திலே மரணமுற்றிருப்பதை நீங்கள் lock up death என்று ஊர்ஜிதப்படுத்தக் கூடாது. ஆகவே, சந்தேகமான முறையில் மரணமுற்றிருக்கிறார் என்று பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து பதில் பெறலாம். நீங்கள் lock up death என்று அதை ஊர்ஜிதப்படுத்தக் கூடாது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் அருகே இருக்கின்ற கடத்தூர் காவல்துறை அதிகாரிகளால், கண்ணங்காட்டுப்பாளையம் கிராமத்தைச் சார்ந்த நஞ்சப்ப கவுண்டர் குமாரர் வயது 34, துரைசாமி என்பவர் கடந்த சனிக்கிழமை நகை திருட்டு வழக்கு விஷயமாக விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பிறகு நான்கு நாட்கள் அவர் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டு அங்கே நகை திருட்டு வழக்குக்காக விசாரிக்கப்பட்டார். பிறகு காவல்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் துரைசாமியின் இல்லத்திற்குச் சென்று அவருடைய தந்தையார் நஞ்சப்ப கவுண்டரைப் பார்த்து உன்னுடைய மகனுக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி அவரை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தபோது, அங்கே துரைசாமி பிணமாகக் கிடந்த காட்சியைக் கண்ட அவர் அதிர்ச்சியுற்றிருக்கிறார். காவல்துறை என்பது இருதயம் போன்றது. இருதயத்தின் துடிப்பு அதிகமாகவும் இருக்கக்கூடாது,

குறைவாகவும் இருக்கக்கூடாது. அப்படி இருக்கும் என்று சொன்னால் அந்த மனிதன் உயிர் வாழ்வது என்பது கேள்விக்குறியாக மாறிவிடும். இன்று முக்கிய துறையாக இருக்கக்கூடியது காவல்துறை. நம்முடைய உயிருக்கெல்லாம் பாதுகாப்பாக இருக்கக்கூடியது காவல்துறை. இன்று விசாரணைக்கு என்று அழைத்துச் சென்ற அந்த ஏழை துரைசாமி மர்மமான முறையில் இறந்திருக்கிறார். சந்தேகமான முறையில் இறந்திருக்கிறார் என்று மட்டும் அவைக்குத் தெரிவிக்கவேண்டும் என்று தாங்கள் ஆணையிட்டுள்ளீர்கள். அந்த வகையிலே நான் நிற்கிறேன். இருந்தாலும் நான் சொல்ல விரும்புவது என்ன வென்றால், காவல்துறை ஒரு மனிதனை விசாரணைக்கென்று அழைத்துச் செல்கின்றபோது இந்த ஜனநாயக நாட்டில் அவனுடைய உயிருக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். அதுதான் நியதி. இல்லையென்று சொன்னால், அவன் உயிர் போகும் என்று சொன்னால் அது ஜனநாயகத்திற்கு விழுகின்ற ஒரு மரண அடி. ஜனநாயகத்திற்கு விழுகின்ற ஒரு கரும்புள்ளி. ஆகவே நான் கேட்டுக்கொள்ளவதெல்லாம் அங்கே ஏழை துரைசாமியினுடைய உயிர் போய் அதற்காக ஆர்.டி.ஓ. விசாரணையெல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்படுகின்ற ஒரு நபரின் உயிர் போகிறபோது-- ஏழைக்கு ஒரு நியதி பணக்காரனுக்கு ஒரு நியதி என்று வரக்கூடாது ** (குறுக்கீடு)

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறையற்றுப் போகக் கூடாது என்று நான் அப்போதே சொன்னேன். (குறுக்கீடு) இதுவெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடு) நான் இந்தப் பிரச்சினையை மட்டும் கேட்க வேண்டும் என்று சொன்னேன். நீங்கள் அதில் பெரிய கதை, காரணங்களை எல்லாம் சொல்லிக்கொண்டு போகிறீர்கள். (குறுக்கீடு) சரி உட்காருங்கள். (குறுக்கீடு) இதுபற்றி அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்ன கொடுத்தீர்களோ அதைப் பேச வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுகின்ற நபர்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் வேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்தி- லாக்கப் டெத் இல்லை என்று தாங்கள் சொன்னாலும்கூட–

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்னுடைய தகவல்படி அங்கே காவல் நிலையத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்ற, போலீஸ் பாதுகாப்பிலிருந்த அந்த துரைசாமியினுடைய உயிர் போய் இருக்கிறது. அதற்கு யார் காரணம்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இனி வருங்காலத்தில் விசாரணைக்கு என்று அழைத்துப்போகின்ற நபர்களுக்கெல்லாம் எந்தவித பாதிப்பும் இல்லாமல் விசாரணையைத் தொடர்வதற்கு முதலமைச்சர் அவர்களும், இந்த ஆட்சியினரும் உத்தரவாதம் தருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் கோபிசெட்டிப்பாளையம் வட்டம், கடத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கண்ணங்காட்டுப்பாளையம் என்ற கிராமத்தில் வசிக்கும் குமாரசாமி என்பவரின் மனைவி திருமதி முருகையாள் என்பவர், *5-11-1995* அன்று இரவு தனது வீட்டிலிருந்து இரண்டரை சவரன் தங்க நகைகள் களவு போய்விட்டன என்றும், அதே ஊரைச் சேர்ந்த நஞ்சப்பன் மகன் துரை என்கிற துரைசாமி இந்தத் தங்க நகைகளைக் களவாடி இருக்கக்கூடும் என்று தான் சந்தேகப்படுவதாகவும், கடத்தூர் காவல் நிலையத்தில் புகார் மனு ஒன்றைக் கொடுத்துள்ளார். இந்தப் புகார் மனு மீது *6-11-1995* அன்று, கடத்தூர் காவல் நிலைய குற்ற எண் *400/95*-ல், இந்திய தண்டனைச் சட்டம், *457, 380* ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடத்தூர் காவல் நிலைய ஆய்வாளர், அந்தக் கிராமத்திற்குச் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டதோடு, அந்தக் கிராமவாசிகளையும் விசாரணை செய்துள்ளார். மேலும் இந்த வழக்கு தொடர்பாக சந்தேகப்படும் துரைசாமியைக் காண நேரிட்டால் அவரை உடனடியாக கடத்தூர் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து வருமாறும், கிராம மக்களைக் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது. *7-11-95* அன்று காலை *9-30* மணியளவில், கண்ணங்காட்டுப்பாளையத்தைச் சேர்ந்த சிலர் துரைசாமியையும், வேட்டயம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடாசலம் மற்றும் பழனிசாமி ஆகியோரையும், கடத்தூர் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துக்கொண்டு சென்றதாகக் கூறப்படுகிறது.

1995 நவம்பர் 10] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

கடத்தூர் காவல் நிலையம் அருகிலுள்ள பஸ் நிலையம் அருகில் செல்லும்போது துரைசாமி உடல் நலமின்றி வாந்தி எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. பயத்தின் காரணமாக தான் ஏற்கெனவே விஷம் அருந்தி விட்டதாக, அருகில் இருந்தவர்களிடம் துரைசாமி கூறியதாகவும் சொல்லப்படுகிறது. கடத்தூர் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. குமாரசாமி என்பவர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, துரைசாமியையும் அவருடன் வந்திருந்த வெங்கடாசலம் மற்றும் பழனிசாமி ஆகியோரையும் கோபிச்செட்டிபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு சுமார் 10–50 மணியளவில் துரைசாமி இறந்து விட்டதாக மருத்துவர்கள் அறிவித்ததாகவும் தெரிகிறது.

இந்தச் சம்பவம் குறித்து திரு. பி.கே. பழனிசாமி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில். கடத்தூர் காவல் நிலைய குற்ற எண் 401/95–ல், குற்றவியல் நடைமுறை சட்டம், பிரிவு 174–ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, முதல் தகவல் அறிக்கை கோபிசெட்டிப்பாளையம் கோட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. கோபிச்செட்டிப்பாளையம் கோட்ட ஆட்சித் தலைவர் துரைசாமியின் உடலைப் பார்வையிட்டு பிரேத விசாரணை நடத்தியுள்ளார். மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனையும் நடத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 11–35

இந்தச் சம்பவத்தில் இறந்து போன துரைசாமி என்பவர் ஏற்கெனவே 4 திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிய வருகிறது. பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த சம்பவம் தொடர்பாக, கோபிசெட்டிப்பாளையம் கோட்ட ஆட்சித் தலைவரை விசாரணை மேற்கொண்டு, அறிக்கை அனுப்பும்படி கேட்டுக் கொண்டுள்ளார். அவரது அறிக்கை கிடைக்கப் பெற்ற பின், அதன் மீது எங்கள் அரசு தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இங்கே இந்தப் பிரச்சினைக்குச் சம்பந்தம் இல்லாத சில கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் பேசியதால் அவற்றிற்கு நானும் பதில் தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும் நபர்களின் உயிருக்கு காவல்துறை பொறுப்பேற்க வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை. உண்மைதான். ஆனால் இது மாநிலத்திலுள்ள